**செய்தி வெளியீடு**

**"அளவீட்டு அறிக்கையினை வெளியிட்டு வைத்தல்**
**சிறுவர் செயற்பாட்டு அளவீடு – 2016"**

**தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

**DCS/DG/PRESS** தொலைபேசி இல: 011 – 2877959 தொலைநகல்: 011– 2147447 2017 பெப்ரவரி 21

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது அண்மையில் 2016 இற்கான சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் அறிக்கையினை வெளியிட்டது. இந்த அளவீடானது தொழிலாளர் அமைச்சு மற்றும் தொழிற்சங்க உறவுகளின் வேண்டுகோளிற்கிணங்க நடாத்தப்பட்டது என்று தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான கலாநிதி அமர சத்தரசிங்க அவர்கள் அறிக்கையினை வெளியிட்டு கூறியிருந்தார். சர்வதேச தொழிலாளர் அமைப்பானது 2016 இல் இந்த நாடளாவிய குடித்தன அளவீட்டை நடாத்துவதற்கு எல்லா விதமான உதவிகளையும் அளித்திருந்தது. இது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறுவர் செயற்பாட்டு அளவீடுகளின் தொடரில் மூன்றாவதாகும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உதவியுடன் 1999 இலும் 2008/09 இலும் முந்தைய சுற்றுக்கள் நடாத்தப்பட்டது.

சமூக விஞ்ஞானப் பண்புகள், பாடசாலை வருகை, பொருளாதார நடவடிக்கைகள், சுகாதாரமும் பாதுகாப்பும், வீடமைப்பு, குடித்தனக் கூறின் பண்புகளும், பெற்றோர்/ பாதுகாவலரின் எண்ணங்கள் மற்றும் 5 – 17 வயது சிறுவர்களோடு சம்பந்தப்பட்ட வேறு பண்புகள் போன்றவற்றினை 2016 சிறுவர் செயற்பாட்டு அளவீட்டில் சேகரிக்கப்பட்ட தரவுகளானது உள்ளடங்குகின்றது. இது ஒரு குடித்தனக் கூறின் அளவீடாகும் என்பதுடன் வழமையாக குடித்தனக் கூறில் வாழும் எல்லா சிறுவர்களையும் உள்ளடக்குகின்றது. ஆனால் குடித்தனக் கூறினை விட்டுத் தூரமாக இருக்கும் சிறுவர்கள் மீதான சில தகவல்களும் கூட சேகரிக்கப்பட்டது. அளவீட்டின் வெளிக்கள வேலைகளானது 2016 தை மாதத்திலிருந்து வைகாசி மாதம் வரை நடாத்தப்பட்டது.

2016 இல் இலங்கையில் 5 தொடக்கம் 17 வயது வரையான சிறுவர்களின் மொத்தத் தொகையானது 4.6 மில்லியனாக மதிப்பிடப்படுகிறது. அளவீட்டு காலத்தின் போது 90.1 வீதமான சிறுவர்கள் பாடசாலைக்குச் சமூகமளித்துக் கொண்டிருந்தார்கள் என அளவீடு மதிப்பிடுகின்றது. பாடசாலைக்குச் சமூகமளிக்காத பிள்ளைகளுக்கிடையில் பெரும்பாலனவர்கள் 5 தொடக்கம் 17 வரை வயதுடையவர்கள் என்பதுடன் அவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப்பேர் க.பொ.த. சாதாரன தரப் பரீட்சை முடிவுகளுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார்கள். தை மாதமளவில் ஒரு சிறியளவினர் அதாவது 6.8 வீதமானோர் 5 வயதிலும் குறைவாக இருப்பதன் காரணமாக இன்னும் பாடசாலைக்குள் உள்வாங்கப்படவில்லை.

5 தொடக்கம் 17 வரையான வயதுடைய சிறுவர்களில் கிட்டத்தட்ட 2.3 வீதமானோர் மட்டும் பொருளாதார நடவடிக்கையின் (வேலை செய்யும்) சில வகைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். இது 2008/09 அறிக்கையில் வெளியிடப்பட்ட பெறுமதியான 12.9% இலிருந்து 10.6% ஐ உடைய ஒரு சரிவான வீழ்ச்சியாக இருக்கின்றது. சிறுவர் தொழிலாளர் மற்றும் தீங்கு விளைவிக்கக் கூடிய தொழிலிலுள்ள சிறுவர் தொழிலாளர்கள் என்பன வேலை செய்யும் சிறுவர் தொழிலாளர்களின் உப பிரிவு ஆகும் என்பதுடன் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தேசிய சட்டத் தொகுதிகளையும் விதி முறைகளையும் கருதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. சிறுவர் தொழிலாளர் என்பது இளமைப் பருவத்திலுள்ள சிறுவர்களை கவர்கின்றதும், அவர்கள் அன்றாடம் பாடசாலை செல்வதை இடையூறு செய்கின்றதும் மற்றும் அவர்களுக்கு மனம், உடல், சமூக அல்லது நடத்தை முறைமை ரீதியாக ஆபத்தாகவும் பாதிப்பாகவும் இருக்கின்றதுமான ஏதாவது வேலையிலுள்ள சிறுவர்களின் தொழிலை குறிக்கின்றது.

மொத்த சிறுவர் தொழிலாளர் ஆனது மொத்த சிறுவர் சனத்தொகையில் 1% ஆக மட்டுமே இருக்கின்றதுடன் தீங்கு விளைவிக்கக் கூடிய தொழிலிலுள்ள சிறுவர் தொழிலாளர் ஆனது 0.9%ஐ விடவும் குறைவாகவும் இருக்கின்றது.

கொள்கை தயாரிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் விசேடமாக இலங்கையிலுள்ள குழந்தைகளின் நலன்களுக்காக வேலை செய்கின்றவர்கள் போன்றோறிற்கு பெறுமதியாய் இருக்கும் இந்த அறிக்கையில் வேலை செய்யும் சிறுவர்கள், சிறுவர் தொழிலாளர்கள், தீங்கு விளைவிக்கும் தொழிலிலுள்ள சிறுவர்கள், வேலை செய்யும் சிறுவர்களின் சுகாதார நிலைமைகள் சிறுவர்களின் வேலை செய்யும் நிபந்தனை பற்றி பெற்றோர்களின் புரிந்து கொள்ளுதல் மற்றும் சிறுவர்களின் வாழ்க்கைத்தரம் ஆகியன பற்றி வேறு பல புள்ளிவிபரங்கள் காணப்படுகின்றன. இந்த அளவீட்டின் எல்லா விபரங்களையும் கொண்ட அறிக்கையானது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத் தளமான www. statistics. gov.lk இல் வெளியிடப்பட்டிருக்கின்றது.

தேசிய பொருளாதார கொள்கைகள் மற்றும் விவகார அமைச்சின் செயலாளர் திரு. ஏம். ஐ. எம். ரபீக், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் செயலாளர் திரு. கோட்டபாய ஜயரத்ன, சர்வதேச தொழிலாளர் அமைப்பிலிருந்து ஜெனீவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டின் தலைவர் திரு. அஸ்வர் கான் உட்பட உத்தியோகத்தர்களும், தொழிலாளர்களுக்கான தேசிய செயற்குழுவின் உறுப்பினர்கள், வேறு அரச அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து சிரேஸ்ட உத்தியோகத்தர்கள், சிறுவர் நலன்புரியுடன் தொடர்புடைய சில அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இவ் வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கலாநிதி. அமர சத்தரசிங்க
பணிப்பாளர் நாயகம்
தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
2017.02.21